இன்றைய செய்தி நாளைய வரலாறு




முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 14-11-2024

# கடல் அலை நடுவே தமிழ்மலை



வான்புகழ் வள்ளுவருக்கு குமரிமுனையில் 133 அடிக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சிலை அமைத்து 25 ஆண்டுகள் ஆகிறது. ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், அதற்கு வெள்ளிவிழா எடுக்கிறார். ‘கடல் அலை நடுவே இருக்கும் தமிழ் மலை’ என்று அந்தச் சிலைக்குப் புகழாரம் சூட்டி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

குமரியில் நின்று நிலைத்திருப்பது வெறும் சிலை இல்லை. ஈராயிரம் ஆண்டு தமிழ்ச் சிந்தனையின் வடிவம் அல்லவா இது?

உலகில் எந்த மொழிக்கு உண்டு, திருக்குறளைப் போன்ற நூல்? தமிழுக்குத் தான் உண்டு!

உலகில் எந்த இனத்துக்கு உண்டு, திருவள்ளுவரைப் போன்ற மனிதர்? தமிழினத்துக்குத் தான் உண்டு!

**ஈரடியால் உலகை அளந்தார் என்பார்கள். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற ஓரடியால், வேதியத்தின் வேரைச் சாய்த்த சம்மட்டி அல்லவா வள்ளுவர். அதனால்தான் அவரையே தமிழினத்தின் அடையாளமாக ஆக்கியது திராவிட இயக்கம்.**

“ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடி மக்களான திராவிடர்கள் அனைவருக்கும் வள்ளுவர் அருளிய திருக்குறள் ஒரு பெரிய செல்வமேயாகும். நமது பெருமைக்கும், நெறிக்கும் (மதத்துக்கும்), நாகரிகத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் எடுத்துக் காட்டாக அதில் பல சங்கதிகளை நாம் காணலாம். திருக்குறளின் பேரால் நம் பெருமையை திராவிடரல்லாத மக்களுக்கு உணரச் செய்ய முடிகிறது. நமது சரித்திரத்திற்கும் நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காரியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியுமாயினும் அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத் தான் புரியும். அவர்களுக்குத்தான் பயன்படும். ஆனால் திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது” என்று 1948 ஆம் ஆண்டு பேசியவர் தந்தை பெரியார்.

கவியரசு கண்ணதாசன் எழுதி - கலைவாணர் பாடிய பாடல் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

**“தீனா... மூனா... கானா... எங்கள்**
**திருக்குறள் முன்னேற்றக் கழகம்**
**தீனா ... மூனா.... கானா**
**அறிவினைப் பெருக்கிடும்**
**பகுத்தறிவோடு நாட்டினர் வாழ**
**திருக்குறள் தந்தார் பெரியார் - வள்ளுவப்**
**பெரியார் - அந்தப்**
**பாதையிலே நாடு சென்றிடவே - வழி**
**வகுப்பதையும் அதன்படி**
**தீனா... மூனா...கானா...**

**நடப்பதும் எங்கள் -**
**கறுப்பு சிவப்பு என்ற**
**பேதத்தை நீக்கும் - தலை**
**கனத்தை குறைத்து நல்ல**
**தன்மையை உண்டாக்கும்...**” என்று போகும் அந்தப் பாடல். அத்தகைய வள்ளுவப் பெரியாரை வாழ்வியல் வழிகாட்டியாக தமிழ்நாடு நினைக்க சமுதாய சீர்திருத்தக் களத்தில் பணியாற்றியது கழகம்.

தலைநகரில் கோட்டம் அமைத்த கலைஞர், கடல் நகரில் சிலை அமைத்தார். அந்தச் சிலைக்கும் மாபெரும் வரலாறு இருக்கிறது. 1.1.2000 ஆம் நாளன்று அது திறக்கப்பட்டாலும் அதற்கான அடித்தளத்தை 1975 ஆம் ஆண்டே அமைத்தார் முதலமைச்சர் கலைஞர். 31.12.1975 அன்று தமிழ்நாடு அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முதல் முடிவு எடுக்கப்பட்டது. அப்பணிகளைத் தொடர முடியாத அரசியல் சூழல் ஏற்பட்டது. பின்னர் 1989 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு சிற்பக் கல்லூரி முதல்வராக இருந்த கணபதி ஸ்தபதியிடம் இதுபற்றி கட்டளையிட்டார். அவரும் 1.3.1990 அன்று திட்டமதிப்பீட்டைத் தந்தார். 17.3.1990 நிதி நிலை அறிக்கையில் அறிவிப்பு செய்யப்பட்டது. செம்பால் செய்யலாமா, கல்லால் செய்யலாமா என்ற விவாதம் நடந்தது.

25.6.1997 ஆம் நாள் தான் கல்லால் ஆன சிலை செய்வது என தலைவர் கலைஞர் தலைமையிலான ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இரண்டு ஆண்டுக்குள் முடிக்க வேண்டும் என்று சிற்பி கணபதி ஸ்தபதிக்கு முதல்வர் கலைஞர் கட்டளையிட்டார். 19.10.1999 அன்று சிலை அமைப்புப் பணிகள் அனைத்தும் முற்றுப் பெற்றது. 2000 ஆண்டின் முதல்நாளில் சிலை திறக்கப்பட்டது. அய்யன் வள்ளுவனார் சிலையை முத்தமிழறிஞர் கலைஞர் திறந்து வைத்தார்.

“கண்ணொளி கொண்ட தமிழரெல்லாம் கண்டு களித்த காட்சி! செவிப்பறை சிறிதும் பழுதுபடாத தமிழனெல்லாம் கேட்டு இன்புற்ற நிகழ்ச்சி! இதயமுள்ள தமிழனெல்லாம் உணர்ச்சியால் உந்தியெழுந்து குதித்திட்ட காட்சி” என்று இதைப் பற்றி தலைவர் கலைஞர் எழுதி இருக்கிறார்கள். கலைஞருக்கு அப்போது எப்படி இருந்தது?

**“அந்தச் சிலை திறப்பதற்கான பொத்தானை அழுத்தியபோது என் விரல் என்னை அறியாமல் அசைவற்றுப் போனது மட்டுமல்ல - என்னையே நான் மறந்துவிட்டேன். நாதஸ்வர இசைவாணர்களும், தவில் வித்வான்களும் அவர் தம் பக்க வாத்தியக்காரர்களுமாக சுமார் முன்னூறுக்கும் மேற்பட்டோர், அய்யனின் சிலை திறக்கப்பட்டபோது இசை முழக்கம் திக்கெட்டும் எட்டிடச் செய்தார்களாம். மறுநாள் காலையில் மற்றவர்கள் சொல்லக் கேட்டுத்தான் 133 நாயன இசை ஒலித்த செய்தியே எனக்குத் தெரியும். அந்த அளவுக்கு மெய்மறந்து போயிருந்திருக்கிறேன். சுமார் முக்கால் மணி நேரம் பேசியிருக்கிறேன்”** என்று எழுதி இருக்கிறார் கலைஞர். இந்த உணர்ச்சிக்குப் பின்னால் இருப்பது தமிழ் உணர்ச்சி, தமிழன் எழுச்சி, தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி ஆகும்.

சிலையை எழுப்பியதன் மூலமாக குறளாய சமுதாயத்தை உருவாக்க நினைத்தார் கலைஞர். சிலைக்கான வெள்ளிவிழா கொண்டாடுவதன் மூலமாக குறளாய சமுதாயத்தை உருவாக்க நினைக்கிறார் இன்றைய முதலமைச்சர்.

**“வள்ளுவம் - என்பது வாழ்வியல் நெறியாக மாற வேண்டும். சமுதாயம் குறள் சமுதாயமாக மலர வேண்டும். வேற்றுமையின் வேர்களைக் கிள்ளியெறிய வள்ளுவ மருந்தே பொது மருந்தாக ஆகுதல் வேண்டும்.”** - என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர். சிந்தனைகள் செயல்வடிவம் பெற உழைப்போம்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.11.2024) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஸ்வீடன் நாட்டுத் தூதர் ஷேன் தெஸ்லெஃப் (Thiru. Jan Thesleff) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தென்னிந்தியாவிற்கான ஸ்வீடன் நாட்டு கௌரவத் தூதர் அருண் வாசு, இந்தியாவிற்கான ஸ்வீடன் நாட்டு வர்த்தக ஆணையர் திருமதி சோஃபியா ஹாக்மேன் (Ms. Sofia Hogman), ஸ்வீடன் நாட்டுத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வணிக ஆலோசகர் மார்கஸ் லுண்ட்கிரன் (Mr. Markus Lundgren), ஸ்வீடன் வர்த்தக சபை இந்தியா தலைவர் கமல் பாலி, நிகழ்ச்சி மேலாளர் கரண் துவா (Thiru Karan Dua) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 2500 ஆண்டுகளுக்குமுன் ஆரியத்துக்கு எதிராகத் தோன்றியதே திருக்குறள்!

# திருவள்ளுவருக்குத் தனி விழா எடுக்கும் முதலமைச்சரின் திட்டம் வரவேற்கத்தக்கது !

### குமரிமுனையில் கூடுவோம் வாரீர்!! - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ.14-

ஆரியத்துக்கு எதிராக திருவள்ளுவரால் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். குமரிமுனையில் முத்தமிழறிஞ ரால் திருவள்ளுவர் சிலை திறக்கப் பட்டதன் அடிப்படையில், வெள்ளி விழாவை ‘திராவிட மாடல்’ அரசின் முதலமைச்சர் சிறப்புடன் கொண்டாடப்பட இருப்பது மகிழ்ச்சிக்குரியது - வரவேற்கத்தக்கது - குமரிமுனையில் மக்கள் கடல் சங்கமிக்கட்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட இயக்கமும், அதன் ஆட்சியான ‘திராவிட மாடல்’ ஆட்சியும் வெறும் அரசியல் பதவிகளையே குறி வைத்துத் தொடங்கப்பட்ட கட்சியோ, ஆட்சியோ அல்ல; மாறாக, இயக்கமாகவே இயங்கி, பகுத்தறிவு, பண்பாடு, கலை, நாகரிகத்தில் தனித்ததோர் உயர்நிலையைப் பெற்று, மக்களிடையே முளைத்து, இன்று பரந்து விரிந்துவரும் ஒரு பண்பாட்டுப் பாதுகாப்புக்கான பாசறை ஆகும்.

**திராவிடம் என்பது என்ன?**

‘திராவிடம்’ என்பதை இன்று யானையை வருணித்த ‘அந்த அய்ந்து பேரின்’ பரிதாப வருணணை, கீதை போன்று புரிதல், குழப்பமாகவே சிலருக்கு இருந்து வருவதனால், அதன் மாண்பும், விழுமியமும் ஒருபோதும் மாறாது; குறையாது; குன்றாது!

உளறுபவர்களின் அரைவேக்காட்டுத்தனத்தைக் கண்டு அகிலம் - அறிவுலகம் கைகொட்டிச் சிரிக்கும்!

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ - சமத்துவம் - இது திராவிடம் - இத்திராவிடத் தத்துவத்தின் பரப்புரை மானிடப் பரப்பு முழுவதற்குமே!

ஆரியம் பிறப்பினால் பேதம் - ஹிந்து மதமும், கடவுள்களும் வேதம் தொடங்கி மனுஸ்ருமிதி, கீதை முதலியன கூறும் எல்லாமே - வருணாஸ்ரமமே மக்களை ஆள வேண்டும்; அதன் எல்லை - ஹிந்து மத எல்லை மட்டுமே!



‘அனைவருக்கும் அனைத்தும்’
‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’
‘எல்லாருக்கும் எல்லாமும்’

இந்த சமூக நீதிதான் சம வாய்ப்பு தான் திராவிடம்!

இரு வேறு எதிர்மறை தத்துவங்களும், நடைமுறைகளும் ஆணும் - பெண்ணும் சம உரிமை உள்ள மானுடத்தின் ஒரே கூறுதான் - இது திராவிடம்.

பெண்கள் ‘நமோ சூத்திரர்கள்’ - மனுஸ்மிருதி, வேதம் அவர்களை சம தகுதியானவர்கள் இல்லை என்று சொல்பவை - எனவே, எந்த உரிமையும் பெறத் தகுதியற்றவர்கள் அவர்கள்.

இப்படிப் பலப் பல!

**ஆரியப் பண்பாட்டை எதிர்க்கத் தோன்றியதே திருக்குறள்!**

ஆரியப் பண்பாட்டை 2500 ஆண்டுகளுக்குமுன்பே - அது நுழைவதைக் கண்டறிந்து எச்சரிக்கும் வகையில், கண்டிக்கவே திருக்குறளை திருவள்ளுவர் எழுதினார்.

ஆனால், எந்த மதச் சாயத்தையும் அவர் கொள்ளவே இல்லை!

வள்ளுவரின் பார்வையோ - உலக மானுடப் பார்வை!

இதனை அதிகமாக விளம்பரப் படுத்தாமலே, இருட்டில் வைக்கப்பட்டிருந்தபோது, அதற்குரிய வெளிச்சத்தைப் பாய்ச்சிய அடிநாள் சுயமரியாதை இயக்கமும் திராவிடர் இயக்கமுமாகும்!

திருவள்ளுவருக்குரிய பெருமை, திருக்குறளின் அருமையை சென்னை யில் தனி மாநாடே 1949 இல் கூட்டி உலகத்தை ஈர்த்தது திராவிடர் கழகம்!

**திருவள்ளுவருக்குத் தனி விழா எடுக்கும் ‘திராவிட மாடல்’ அரசு**

திராவிடர் கழகம் - தந்தை பெரியார், அண்ணா, கலைஞர், நாவலர் என்ற வரிசையில் இன்று நமது ‘திராவிட மாடல்’ ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர், சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், குமரியில் வள்ளுவருக்குத் தனி விழா எடுப்பதுபற்றி விடுத்துள்ள அறிக்கை மிகவும் வரவேற்கத்தக்கது.

காலத்தின் தேவையறிந்த செயற்பாட்டினை அறிவிக்கும் ஒரு பண்பாட்டுப் பாதுகாப்பு ஏவுகணையாகும்!

திருவள்ளுவருக்குக் ‘காவிச் சாயம்’ பூசி, அதை ஒரு ஹிந்து மத நூல் என்று நிறுவிட ஆரியம் தனது அதிகாரச் சூழலைப் பயன்படுத்திச் செய்திட துடிக்கிறது.

அந்த நிலையில், திருக்குறள் மதங்களுக்கு அப்பாற்பட்ட - மனிதர் அனை வருக்கும் உரிய உறவும், உரிமையும் கொண்டுள்ள நூல் என்பதை உலகுக்கு உணர்த்திட நல் வாய்ப்பு!

‘திராவிட மாடல்’ முதலமைச்சர் அழைக்கிறார், “திக்கெட்டும் உள்ள திருக்குறள் நெறியினரே, திரண்டு வாருங்கள் - குமரிமுனையில் ஒரு புது வெள்ளம் பாயட்டும்!”

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் எண்ணற்ற தன்மான, தமிழ் மானப் பெரும்புலவர்கள் அனைவரது உழைப்புக்கும், விளைச்சலாக பண்பாடு, மான மீட்புப் பணியாக அவ்விழா அமையட்டும்!

அனைவரும் வாரீர்!! வாரீர்!!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (13.11.2024) , கோடம்பாக்கம் மண்டலம், தியாகராயர் நகர், தெற்கு உஸ்மான் சாலையில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியில் ரூ.164.92 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணியினைப் பார்வையிட்டு, வரைபடத்தினை ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் செ.சரவணன், துணை ஆணையாளர் (பணிகள்) வ.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.